1995 ஏப்ரல் 20]

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நீண்டதொரு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். விவசாயி சேற்றிலே காலை வைத்தால்தான் நாம் சோற்றிலே கையை வைக்க முடியும் என்பதை நன்றாக உணர்ந்த நமது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகளையும் தந்து இன்றையதினம் நெல் கொள்முதலில் இருந்து உணவுப் பண்டங்கள் அதிகமாக நன்கு உற்பத்தி செய்கின்ற நிலை இருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் அமைச்சர் அவர்கள், கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு சட்டம் கொண்டுவர ஆவன செய்யப்படும் என்று சொன்னதற்கு மிக்க நன்றி. அந்தச் சட்டத்தின் தன்மை எந்த அடிப்படையில் வைக்கப்படும், அது எவ்வளவு விரைவில் கொண்டு வரப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் இந்தப் பேரவையில் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா நிலங்களிலும் வீடு கட்டுவது, புதிய குடியிருப்புகளை உருவாக்குவது, தொழிற்சாலையைக் கொண்டு வருவது என்பனவற்றைத் தடுக்கின்ற நோக்கம் அல்ல. நேரடிப் பாசனத்தின் மூலம் பயிர் செய்யக்கூடிய நிலப்பரப்பு, ஏரிகள், குளங்கள் வாயிலாக, கிணறுகள் வாயிலாக பாசனம் தரக்கூடிய நிலங்களில் மட்டுமே புதிய குடியிருப்புகள், புதிய கட்டிடங்கள், தொழிற்சாலைகள் வருவது தவிர்க்கப்பட வேண்டும். இந்த நோக்கிலே இன்றைக்கு அரசாங்கம் அதற்குரிய ஆய்வினை மேற்கொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *374*, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

374—

கிருஷ்ணகிரி பால் பண்ணைக்கு தண்ணீர் வசதி அளித்தல்

24886*—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி பால் பண்ணைக்குத் தேவையான நீரை நகராட்சியிடமிருந்து விலைக்கு வாங்காமல் தானே பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

[*1995 ஏப்ரல் 20*

முற்பகல் *10-55*

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சுமார் 26 இலட்சம் ஏழை விவசாயிகளுடைய வயிற்றிலே பாலை வார்க்கின்ற வகையிலே லிட்டர் ஒன்றுக்கு ரூ.1/- உயர்த்தி இன்றிலிருந்து அதை அமல்படுத்தியதற்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு விவசாயிகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே விவசாயிகளுக்கு ரூ.4500 என்று கொடுக்கின்ற கடனை ரூ. 6000 ஆக உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே ரூ. 3000-ஐ மானியமாக வழங்கி மேலும் அந்த விவசாயிகளுடைய பொருளாதாரத்தை மேம்படச் செய்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி பால் பண்ணைக்குத் தேவையான தண்ணீர் கிருஷ்ணகிரி நகராட்சியிலிருந்து பெறப்படுகிறது. கிருஷ்ணகிரி நகராட்சியிலே வாழ்கின்ற மக்களுக்குப் போதுமான குடிதண்ணீர் இல்லாத பட்சத்தில் அவர்கள் பயன்படுத்தக்கூடிய அந்தத் தண்ணீர் இந்த பால் பண்ணைக்காக 50 ஆயிரம் லிட்டர் வீதம் நாளொன்றுக்கு தரப்படுகிறது. அந்தப் பண்ணைக்கு நாளொன்றுக்கு சுமார் 3 லட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. எனவே முழுமையான தண்ணீரை அந்தப் பண்ணைக்குக் கொடுப்பதற்காக, அருகிலுள்ள கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே அந்தப் பண்ணை முதல் முறையாக லாபத்தை ஈட்டியிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியோடு, அந்த லாபத் தொகையை வைத்து தண்ணீர் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்துடன் பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதற்குப் பிறகு அது செயல்படுத்தப்படும்.

1995 ஏப்ரல் 20]

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நகராட்சியிலே இருந்து 50 ஆயிரம் லிட்டர் தண்ணீர் பெறப்படுவது போக, மீதம் 2.5 லட்சம் லிட்டர் அந்தப் பண்ணையிலுள்ள உவர் தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. பல கோடிக் கணக்கில் முதலீடு செய்யப்பட்ட அந்தத் தொழிற்சாலையினுடைய இயந்திர பாகங்களில், அந்த உவர் தண்ணீர் செல்லுகின்ற நேரங்களில் அவற்றின் இரும்புப் பொருட்கள் துருப்பிடிக்கின்ற நிலை ஏற்படும். எனவே அந்த நிலையை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டிலேயே கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 375, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

375—

இருவழி சோதனைச் சாவடிகள்

*38755—**திரு. ஆர். பி. பரமசிவம்:**

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள வணிக வரி சோதனைச் சாவடிகளை இருவழி சோதனைச் சாவடிகளாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரிகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் தற்போதுள்ள எட்டு இருவழி சோதனைச் சாவடிகளைத் தவிர மற்ற வணிக வரி சோதனைச் சாவடிகளை இரு வழி சோதனைச் சாவடிகளாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.